Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 169/2024 PW-4**

Name : கிருஷ்ணன்
Father / Husband name : முனுசாமி
Village : அகூர்
Age : 45
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 02.03.2026

A1 present. A2, A3 absent. Petition u/s 317 CrPC filed and allowed. WHC 555 present. Defence counsel present.

**முதல் விசாரணை**

நான் தற்போது விவசாய வேலை செய்துவருகிறேன். சாட்சி ஆறுமுகம் என்பவரை எனக்கு தெரியும், அவர் எனது தம்பி. என்னிடம் காட்டப்படும் ஆவணமான பார்வை மகசரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது இல்லை. சுமார் 2 மாதத்திற்கு முன்னதாக ஒருநாள் பகல் 11 மணியளவில் அகூரிலுள்ள எனது கழனியின் அருகே ரோசனை போலிசார் வந்து விசாரித்து மேப் போட்டு கையொப்பம் கேட்டார்கள், நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். என்னுடன் எனது தம்பி ஆறுமுகம் கையொப்பம் செய்தார். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் விசாரித்தார்கள் என்றும் விசாரணையின்போது 10.07.2023 ந்தேதி காலை 10.00 மணிக்கு நீங்களும் உங்கள் உங்கள் தம்பி ஆறுமுகம் என்பவரும் கழனியிலிருந்தபோது தீவனூர் கிராம எல்லையிலுள்ள நித்தியபிரகாஷ் கழனி அருகே போலிசார் வழக்கு சம்மந்தமாக

விசாரித்து சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயாார் செய்தார்கள் என்றும் அந்த பார்வை மகசரில் நீங்களும் உங்கள் தம்பி ஆறுமுகம் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றும் போலிசார் விசாரணையின் உண்மையை சொல்லிவிட்டு தற்போது பார்வை மகசரிலுள்ள சாட்சி கையொப்பத்தை மறுக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்குச்சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் தீவனூரில் உள்ளது. நான் தீவனூர் செல்லவில்லை என்றால் சரிதான். பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடத்தில் எழுதியிருந்த விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பார்வை மகசரிலுள்ள கையொப்பம் என்னுடையது இல்லை, யார் கையொப்பம் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.